மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்.

முன்னிலை :– திருமதி.P.அனுராதா, B.A., B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர் எண்.1, சாத்தூர்.

2024 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 15 ம் நாள் திங்கட்கிழமை

இ.மஎண்.04/2024
உள்
அசல் வழக்கு எண்.80/2022
---------

1) கருப்பசாமி (இறப்பு)
2) க.பாலசரஸ்வதி
3) க.கருப்பசாமி
4) சிங்கராஜ்
5) சிங்கலட்சுமி
6) சங்கரேஸ்வரி ... உத்தேச மனுதாரர்கள்/உத்தேச வாதிகள்

/எதிர்/

1. மணிமுத்து
2. சாந்தி ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்
3. ஆறுமுகம் ... உத்தேச எதிர்மனுதாரர்/உத்தேச பிரதிவாதி

இந்த மனு 13.03.2024 ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்பு 03.04.2024–ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது உத்தேச மனுதாரர்கள்/உத்தேச வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.V.பாலமுருகன் அவர்கள் ஆஜராகியும், 1, 2 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.V.மாரிச்சாமி அவர்கள் ஆஜராகியும், 3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.ஜெயபாண்டி அவர்கள் ஆஜராகி எதிருரை இல்லை என்று மேற்குறிப்பு செய்யப்பட்ட நிலையிலும், மனுதாரர்கள் தரப்பு மனுவுரை மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிருரையை நன்கு கேட்டறிந்தும், சாட்சிய சான்றாவணங்களை நன்கு பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும் . . .

**<u>உத்தரவு</u>**

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 6 விதி 17 மற்றும் பிரிவு 151 ன் கீழ் இம்மனுவினை ஏற்று அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களினால்,

இறந்துபோன வாதியின் வாரிசுகளான உத்தேச மனுதாரர்கள்/உத்தேச வாதிகளை வாதிகளாகவும், உத்தேச 3ம் எதிர்மனுதாரரை 3ம் பிரதிவாதியாகவும் சேர்த்து தாவா பிராதை சீர்திருத்தம் செய்ய உத்தரவிடக்கோரி 04.03.2024ம் தேதி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) <u>உத்தேச மனுதாரர்கள்/உத்தேச வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடவிட்டு சுருக்கம்:–</u>

அசல் வழக்கில் வழக்கை தாக்கல் செய்துள்ள வாதி கடந்த 25.08.2023ம் தேதி மேற்படி உத்தேச மனுதாரர்கள்/உத்தேச வாதிகளையும் மற்றும் 3ம் உத்தேச எதிர்மனுதாரரையும் வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டார். மேற்படி இறந்துபோன வாதியின் வாரிசுகளான 2 முதல் 6 வரையிலான உத்தேச வாதிகளை தாவா வழக்கில் வாதிகளாக சேர்க்க வேண்டியும், மேற்படி வாதியின் வாரிசுகளில் ஒருவரான ஆறுமுகம் என்பவர் மேற்படி உத்தேச மனுதாரர்கள்/உத்தேச வாதிகளுடன் சேர்ந்து வழக்கை மேல்நடத்த உத்தேச வாதிகளுக்கு ஒத்துழைப்பு தராத காரணத்தினால் மேற்படி உத்தேச 3ம் எதிர்மனுதாரர்/உத்தேச 3ம் பிரதிவாதியாக சேர்க்க வேண்டியும் தனித்தனியாக மனுதாரர்கள் தரப்பில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி மனுக்கள் இ.ம.எண்.02/2023, 03/2023 என நம்பராகி நீதிமன்றத்தால் கடந்த 19.01.2024ம் தேதி அனுமதிக்கப்பட்டிருந்தது. அதன்பேரில் உத்தேச மனுதாரர்கள்/உத்தேச வாதிகளை வாதிகளாகவும், உத்தேச 3ம் எதிர்மனுதாரரை 3ம் பிரதிவாதியாகவும் சேர்த்து தாவா பிராதை சீர்திருத்தம் செய்ய வேண்டியது அவசியமாயும், நியாயமாயும் உள்ளது என்று மனு தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

3) <u>1, 2 உத்தேச எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரை சுருக்கம்</u>:–

மனுதாரர் மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும செல்லத்தக்கதல்ல. மனுதாரர் தாவா மனுவில் இறந்த வாதியின் சட்டப்படியான வாரிசுகளாக சேர்க்கக்கூறி மனு செய்துள்ளார். மேற்படி மனுவில் இறந்த வாதியின் வாரிசுகளின் ஒருவரான ஆறுமுகம் என்பவரை 3ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியாக சேர்க்க மனு செய்துள்ளதாகவும், தாவா

மனுவில் தெரிவித்துள்ளார். எந்த எந்த மனுவில் பெயரில் எண் வழங்கப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது என்ற விபரத்தை தாவா மனுவில் தெரிவிக்கவில்லை. அதனால் தாவா மனுவானது எதிர்மனுதாரர் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று எதிருரை தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

4) இந்த மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கக்கூடியதா? இல்லையா? என்பதைக் காண்பதேயாகும்.

5) இருதரப்பிலும் எவ்வித வாய்மொழி சாட்சியமும், ஆவண சாட்சியமும் தாக்கல் செய்யப்படவில்லை.

6) இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. அபிடவிட்டு, எதிருரை மற்றும் வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டது.

7) **தீர்வு**:–

மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனுவும் அது குறித்து வாதிடப்பட்டதும் இந்த மனுவில் ஏற்புடையதாக உள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் எதிருரையும் அதுகுறித்து வாதிடப்பட்டதும் இந்த மனுவில் இந்த சூழ்நிலையில் இந்த வழக்கில் ஏற்புடையதாக இல்லை. மனுதாரரால் இறந்துபோன வாதியின் வாரிசுகளான உத்தேச மனுதாரர்கள்/உத்தேச வாதிகளை வாதிகளாகவும், உத்தேச 3ம் எதிர்மனுதாரரை 3ம் பிரதிவாதியாகவும் சேர்த்து தாவா பிராதை சீர்திருத்தம் செய்ய உத்தரவிடக்கோரி 04.03.2024ம் தேதி தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில் மனுதாருக்கு தனது தரப்பை நிரூபணம் செய்ய முடியாமல் போய் ஈடு செய்ய முடியாத இழப்பும், நஷ்டமும் ஏற்படக்கூடும். மேலும், இம்மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில் இவ்வழக்கு சம்பந்தமான வேறு வழக்குகளும் எழக்கூடும். மேலும், ஒரு வழக்கில் இறந்துபோன ஒருவருக்காக அவரது தரப்பில் அவரது வாரிசுகளையோ அல்லது தரப்பினர்களையோ கட்சியாக சேர்த்து வழக்கை மேல்நடத்த வேண்டியது அவசியமான ஒன்றாகும். இந்த வழக்கிலும் உத்தேச வாதியை கட்சியாக சேர்க்கக்கோரி தாக்கல் செய்துள்ள இ.ம.எண்.02/2023, 03/2023 மனுக்கள் அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே,

இந்த மனுவினையும் அனுமதிக்க வேண்டியது அவசியமான ஒன்றாகும். மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இம்மனுவினை அனுமதிக்கும்பட்சத்தில் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வாறு இழப்பு ஏற்படும் என்பது குறித்து எதிருரையில் எதிர்மனுதாரர் குறிப்பிட்டு கூறவில்லை. எனவே, மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதிக்க வேண்டியது நீதியின்பால் அவசியமாயும், நியாயமாயும் உள்ளது என இந்த நீதிமன்றம் முடிவு செய்து மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதித்து உத்தரவிடுகிறது.

இறுதியாக, இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனு, எதிருரை, வாதுரைகள் மற்றும் நீதியின்பால் கொண்ட அக்கறை ஆகியவற்றை கருத்திற்கொண்டு, இறந்துபோன வாதியின் வாரிசுகளான உத்தேச மனுதாரர்கள்/உத்தேச வாதிகளை வாதிகளாகவும், உத்தேச 3ம் எதிர்மனுதாரரை 3ம் பிரதிவாதியாகவும் சேர்த்து தாவா பிராதை சீர்திருத்தம் செய்ய உத்தரவிடக்கோரி 04.03.2024ம் தேதி தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இம்மனுவினை அனுமதித்து இந்த நீதிமன்றம் உத்தரவிடுகிறது. மனுவின் தன்மை கருதி செலவு தொகை யாதுமில்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2024ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 15ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

உத்தேச மனுதாரர்கள்/உத்தேச வாதிகள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை
எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை
உத்தேச எதிர்மனுதாரர்/உத்தேச பிரதிவாதி தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
சாத்தூர்.
இ.ம.எண்.04/2024
உள்
அ.வ.எண்.80/2022
**உத்தரவு**
நாள்– 15.04.2024